**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்**

**வழக்கு எண்: CC – 148 /2023**

**வழக்கு சாட்சி :PW4(LW4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமையா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | நல்லான் | தொழில் | : | ஓய்வு பெற்ற ஊழியர் |
| கிராமம் | : | ஆவாரங்குடிபட்டி | சமயம் | : | |
| தாலுக்கா | | | வயது | : | 69 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 29th day of November 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆவாரங்குடிப்பட்டியில் வசித்து வருகிறேன் . இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது இல்லை. இந்த வழக்கு குறித்து போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரிகள் எனது உறவினர்கள் என்றால் சரியல்ல. கடந்த 04.02.2022 ம் தேதி மதியம் 02.30 மணியளவில் நானும், பழனிச்சாமி என்பவரும்குஞ்சான் என்பவரின் வீட்டின் அருகே நின்று கொண்டிருந்த போது அன்னவாசல் போலிசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜரும், மாதிரிவரைபடமும் தயார் செய்தார்கள் என்றும் ,அதில் நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன் என்று எனது போலிஸ் விசாரணயில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனது உறவினர் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எ.த.கு.வி</u>

இல்லை.

# வாக்குமூலம்
# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், இலுப்பூர்
# வழக்கு எண்: CC – 63 /2024

**வழக்கு சாட்சி :PW1(LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பழனியாண்டி | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | குழந்தை | தொழில் | : | |
| கிராமம் | : | ஆலத்துார் | சமயம் | : | |
| தாலுக்கா | | இலுப்பூர் | வயது | : | 61 |

(எதிரி ஆஜர்.)

Solemnly affirmed in accordance with the Indian Oaths Act–1969 Section –6(2) on the day 28th day of November 2024.

சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார் – (சாட்சி அவர் கூறும் வாக்குமூலத்தை நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யும் போது அவர் உடனுக்குடன் பார்க்கும் விதமாக அவர் முன்பாக ஒரு கணினி திரை வைக்கப்பட்டுள்ளது).

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது ஆலத்துாரில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் ஆவார். தேதி, மாதம் நினைவில் இல்லை . சுமார் ஒரு வருடத்திற்கு முன்னர் காலை 07.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது சத்தமாக இருந்தது. வெளியே வந்து பார்க்கும் போது எதிரி எனது மருமகளிடம் தகராறு செய்து கொண்டிருந்தார். அப்போது அங்கு தள்ளுமுள்ளு ஏற்பட்டது. நான் தடுமாறிக் கீழே விழுந்ததில் எனக்கு வலது கன்னத்தில் காயம் ஏற்பட்டது. ஆஜர் எதிரி அங்கு நின்று கொண்டிருந்ததால் அவர் தான் என்னை தள்ளி விட்டிருப்பார் என நினைத்து அவர் மீது இலுப்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் . **புகார் வாக்குமூலம் உள்ள கையொப்பம் அ.சா. ஆ– 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . ஆஜர் எதிரி என்னை அசிங்கமாக பேசவோ, தாக்கவோ, இல்லை. புகாரில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதிகோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :</u>

ஆஜர் எதிரியுடன் நான் சமாதானமாக சென்று விட்டேன் என்றால் சரிதான். கடந்த 09.12.2023 ம் தேதி காலை 07.00 மணியளவில் நான் வீட்டில் இருந்த போது ஆஜர் எதிரி வந்து எனது மருமகளிடம் குடிபோதையில் தகராறு செய்து அசிங்கமாக பேசிக்கொண்டிருந்தார் என்றும், அதை கேட்டதற்கு எதிரி அடித்து கீழே தள்ளியதில் எனக்கு வலது கன்னத்தில் காயம் ஏற்பட்டது என்றும், அடித்தார் என்றும், எனது புகாரிலும்,போலிஸ் விசாரணையிலும் சொல்லிவிட்டு எதிரி ஒரே

ஊர்க்காரர் என்பதால் தற்போது எதிரியுடன் சமாதானமாக சென்று விட்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எ.த.கு.வி</u>**

இல்லை.